சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 25.06.2025.
SC.NO.197/2022
PW9 ( Lw9 ) : மோகன் (வயது 34 ) த/பெ.ஆறுமுகம்
(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)
( CrImp.No. 97/2023 ல் வழங்கிய உத்தரவுபடி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்)

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் திருமங்கலத்தில் கிராம உதவியாளராக வேலை செய்து வருகிறேன். 161 crpc வாக்குமூலத்தில் நான் கூலி வேலை செய்வதாக கூறியிருந்தால் அது தவறானது என்றால் சரிதான். நான் ஏற்கனவே அளித்த முதல் விசாரைணை வாக்குமூலத்தில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றபோது எதிரி உடன் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் களப்பணியில் இருந்தபோதே கையெழுத்து வாங்கிவிட்டார்கள். விசாரணைக்கு செல்லவில்லை. அதனால் எதிரி கொடுத்த வாக்குமூலம் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால், நான் படித்து பார்க்கவில்லை, களப்பணியில் இருந்தபோது, அழைத்ததால் விஏஓ கையெழுத்து செய்தவுடன் நானும் கையெழுத்து செய்தேன். எதிரி என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்றோ ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரமோ தெரியாமல் விஏஓ கையொப்பம் செய்ததால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மகஜரில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் அருவாளை காட்டினார்கள். அருவாளில் ரத்த கறை படிந்திருந்ததா என்று நான் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன், அருவாளில் ரத்த கறை இல்லை. நான் எந்த இடத்திற்கும் செல்லவில்லை என்றும் எந்த பொருளையும் பார்க்கவில்லை என்றும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** - இல்லை

/ Signed /
மோகன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி